# இயேசு ஊழியங்கள்

105/229, எம்.டி.எச் சாலை, வில்லிவாக்கம், சென்னை – 600 049
போன்: 9003009752
ஈமெயில்: beten.yatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org



கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு மகளே...

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தமுள்ள நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் நல்வாழ்த்துக்கள். இந்த் கடிதத்தின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் எனக்கு மிகுந்த சந்தோஷம். பரிசுத்த ஆவியானவர் தாமே உங்களையும் உங்கள் கருவில் வளர்ந்து கொண்டிருக்கிற குழந்தையையும் நல்ல சுகத்துடன், பெலத்துடன் பாதுகாத்துப் பராமரித்து, நல்ல கிருபைகளையும் உன்னத அபிஷேகத்தையும் தந்து நடத்துவாராக.

இன்றைக்கும் நாம் தியானத்திற்கென்று எடுத்துகொண்ட வசனம் 1சாமுவேல் 1:11 சொல்லப்பட்ட வசனங்களை நன்கு வாசித்துப்பாருங்கள். “சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப்பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்: அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்.” இந்த வசனத்தில் அன்னாள் வெகுகாலமாக மலடியாய் இருந்ததினால் அந்த வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கர்த்தர் சமுகத்தில் வந்து ஒரு விண்ணப்பத்தை வைக்கிறாள். இந்த விண்ணப்பத்தை பல ஆண்டுகளாக ஏறெடுத்திருக்க கூடும். இன்னும் சொல்லப் போனால் அனுதினமும் ஏறெடுத்திருக்கக் கூடும். ஆனால் கர்த்தரிடத்திலிருந்து எந்தப் பதிலும் வரவில்லை மிகுந்த துக்கத்திலும், அவமானத்திலும் வாழ்ந்து கொண்டிருந்தாள். அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் தன்னுடைய ஜெபத்தில் சில மாற்றத்தை ஏற்படுத்தினாள். அந்த மாற்றம் என்ன?

1. தன்னை மிகவும் தாழ்த்தினாள், 2. பொருத்தனை செய்தாள்.

இந்த முறை ஜெபித்தபோது தன்னை மிகவும் தாழ்த்துகிறாள், அத்தோடு பொருத்தனை செய்தும் ஜெபிக்கின்றாள். எனக்கு ஒரு ஆண்பிள்ளையைத் தேவன் கொடுப்பாரானால் கர்த்தருக்கே ஒப்புக்கொடுப்பேன் என்று பொருத்தனை செய்கிறாள். அந்தப் பொருத்தனையின் ஜெபத்திற்குத் தேவன் செவிகொடுத்து அன்னாளுடைய கர்ப்பத்தின் கனியைத் தொட்டு ஆசீர்வதித்தார். சாதாரணக் குழந்தையாகக் கொடுக்கப்படவில்லை தீர்க்கதரிசனக் குழந்தையைக் கொடுத்தார். இந்த் கடிதத்தை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு மகளே, அன்னாள் பொருத்தனையின் ஜெபத்தைக் கேட்டு அற்புதத்தைச் செய்த தேவன் இன்றைக்கும் பல எதிர்பார்ப்புகளோடு இருக்கும் உங்கள் ஜெபத்திற்கும் பதில் கிடைக்கவில்லை என்று கவலைப்பட்டுக் கொண்டிருகிறீர்களா? அன்னாள் செய்ததுபோல் நீங்களும் பொருத்தனை செய்து ஜெபியுங்கள் உடனே உங்கள் ஜெபத்திற்கு பதில் கிடைக்கும். ஆனால் பொருத்தனை செய்துவிட்டபின் உங்கள் மனம் மாறிவிடக் கூடாது. அது நமக்கு ஆசீர்வாதமாக இருக்காது. நிச்சயம் உங்கள் கருவில் இருக்கும் குழந்தைக்கு எந்தக் குறையும் இல்லாமல் தேவன் அற்புதவிதமாக அசீர்வதிப்பார்.

உங்களுக்காக நான் ஜெபிக்கப்போகிறேன். என்னோடு இணைந்து நீங்களும் ஜெபியுங்கள்.

மகா பரிசுத்தமுள்ள எங்கள் பரலோகப் பிதாவே, நீர் ஆசீர்வதித்துக் கொடுத்த இந்த நல்ல நாளுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். என் அன்பு மகளை உம்முடைய ஆசீர்வதிக்கும் கரத்திற்கு நேராகக் கொண்டு வருகிறேன். அவர்கள் கருவில் வளர்ந்து கொண்டிருக்கும் குழந்தைக்கு நல்ல சரீர பெலனையும் வளர்ச்சியையும் தந்து ஆசீர்வதிப்பீராக. மருத்துவர்கள் இவர்கள் மனது கஷ்டப்படும்படி எந்தக் காரியத்தைச் சொல்லியிருந்தாலும் அதை இயேசுவின் இரத்தத்திற்குள் மறைக்கிறேன். இந்தச் சிசுவுக்கு எந்தத் தீங்கும் அணுகாமல் பாதுகாத்துக் கொள்ளும்படியாகப் பிராத்தனை செய்கிறேன். உம்முடைய பரிசுத்தத் தீர்க்கதரிசனச் சந்ததிக்கு விரோதமாக சாத்தான் செய்கிற தந்திரங்களை அழித்துப் பாதாளத்தில் போட்டு சுட்டெரிப்பீராக. என் மகளைப் பெலப்படுத்தி பூரண சுகத்தோடு சுகப்பிரசவத்தில் குழந்தையைப் பெற்றெடுக்கக் கிருபை செய்தருளும் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேம் நல்ல பிதாவே, ஆமென்.

மேலும் ஜெப உதவிக்கு எங்கள் ஜெபவீரர்களைத் தொடர்புகொள்ளுங்கள் : 9003009752

அன்புடன்

S. Selvaraj

சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு: உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3:00 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*